# கர்த்தரைக் கலங்கப்பண்ணின காரியங்கள்



# நமது கர்த்தரைக் கலங்கப்பண்ணின காரியங்கள்

**“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.”**

**– யோவான் 14:1**

*Christian Questions என்னும் வலையொலியில், ஏப்ரல் 06, 2020 அன்று ஒலிபரப்பப்பப்பட்ட நிகழ்வு #1120ன் தமிழாக்கம்*

*தொகுப்பாளர்: சகோ. ரிக் மற்றும் ஜோனத்தன் அவர்கள்*

**Copyright :**

*Christian Questions.com*

**Tamil Translated by :**

*www.foodfornewcreature.com*

***யோவான் 12:27 – "இப்போது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேலையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்."***

*இயேசுவே நம்முடைய நாயகர் (ஹீரோ). அவருடைய முன்மாதிரியும், அவருடைய போதனைகளும், அவருடைய கிரியைகளும், அவருடைய உண்மைத்தன்மையும் மிகவும் பேர்ப்போனவையாக இருக்கின்றன. தேவைப்படும் எவருக்கும் அவை உத்வேகத்தைப் பிரவாகிக்கச்செய்கின்றன. அப்பேர்ப்பட்ட இயேசுவானவர் சிந்தையில் கலங்கினார் எனும்போது, நமது இரட்சகரைக் குறித்து நாம் எவ்வாறெல்லாம் பிரம்மாண்டமாக நினைத்துக்கொண்டிருக்கிறோமோ அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக தோன்ற செய்கின்றது. அத்துடன், எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம்கூட **(எபி. 7:26)** அவர் **"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்"** என்று கூறுகின்றதே. அப்பேர்ப்பட்ட அவருக்கு எப்படிக் கலக்கம் ஏற்படக்கூடும்? உண்மை என்னவெனில், **அவர் தம் வாழ்வின் மூன்று தருணங்களில் கலங்கினதாகப் பதிவுகள் உள்ளன.***

*அப்படியானால், இந்த அனுபவங்கள் பலவீனத்தின் அல்லது சந்தேகத்தின் ஒரு வெளிப்பாடாக இருந்திருக்குமா? ஒருவேளை நாம் இதுவரையிலும் பேசிடாத ஏதேனும் குறைப்பாடு இயேசுவிடம் காணப்பட்டிருக்குமா?*



*நிச்சயமாக இல்லை! இந்த அனுபவங்களெல்லாம் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் அற்புதமான மனோபலத்தையும், தைரியத்தையும், தேவபக்தியையுமே நமக்குக் காட்டுகின்றன.*

*சரி, முதலாவதாக, நாம் ஏன் கலக்கமடைவதை ஒரு பெரிய விஷயமெனப் பேசிக்கொண்டிருக்கிறோம்?*

*காரியம் என்னவெனில், இயேசு பரிபூரணராக இருந்தபடியால், அவர் எவ்விஷயத்தையும் ஆழமாக உணரலானார். அவர் தம்மீது அதிக பாரமான அழுத்தத்தைக் கொண்டிருந்தார்.*

***கலக்கமடைதல்:** ஸ்ட்ராங்க்ஸ் #5015 **டராஸ்ஸோ / tarasso;***
***கலங்குதல்** அல்லது **கிளர்ச்சியடைதல்***

***'கலக்கமடைதல்'** என்பதுடன் நெருக்கப்படுதல் / anguished, வியாகுலப்படுதல் / distressed, துயரப்படுதல் / pained அல்லது கவலை / anxious போன்ற சில வார்த்தைகளையும் நம்மால் அடையாளம் காண முடிகிறது. பலரால் இந்த உணர்வுகளுடன் COVID-19ன் அனுபவத்தினைத் தொடர்புபடுத்த முடியும்.*

***கலக்கமடைதல்** எனும் வார்த்தையின் மற்ற உதாரணங்களைப் பார்ப்போம்:*

***லூக்கா 1:11 – 12:** அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்தில் நின்று, அவனுக்குத் தரிசனமானான். சகரியா அவனைக் கண்டு கலங்கி <5015>, பயமடைந்தான்.*

*சகரியா தனது சவுகரியமான நிலையிலிருந்து (comfort zone) வெளியே வெகுதூரம் தள்ளப்பட்டார். எதிர்பாராதவாறு, மகத்தான வல்லமை கொண்ட தூதன் அவரைச் சந்தித்தார்.*

***மத்தேயு 2:1 – 3:** ஏரோது இராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, 'யூதருக்கு இராஜாவாகப்*

***பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்' என்றார்கள். ஏரோது இராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள் <5015>.***

*ஏரோது கிளர்ச்சியடைந்தார்.*
*அடக்கப்பட வேண்டியதாயிருந்த பயமுறுத்தும்*
*அச்சுறுத்தலை அவர் உணரலானார்.*

***மத்தேயு 14:26 – 27: அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து <5015>, 'ஆவேசம்' ("ஐயோ பேய்" – திருவிவிலியம்) என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு அவர்களோடே பேசி: 'திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்' என்றார்.***

*சீஷர்கள் திகிலடைந்திருந்தனர்.*

*கலக்கமடைதல் எனும் இந்த வார்த்தையானது ஏதோ சில சிறுசிறு எரிச்சலை அர்த்தப்படுத்தவில்லை; மாறாக அது ஒரு வலுவான அசௌகரியத்தின் உணர்வினைக் குறிக்கின்றது.*

*இயேசு ஒரு மனிதராக இருந்தபடியால், கலக்கமடைவதையும் அவர் அனுபவிக்க நேர்ந்தது.*

*இயேசு ஞானஸ்நானம் பெற்று தம்முடைய ஊழியத்தைத் துவக்கினபோது, அவர் செய்த முதல் காரியமே உபவாசித்து ஜெபித்ததுதான்.*




***சாத்தான் செய்த முதல் காரியமோ, அவரைத் தடம் புரளச்செய்வதற்கு முயற்சித்ததுதான். சாத்தான் தோல்வியுற்றான் என்றாலும் முயற்சியைக் கைவிடவில்லை:***

***லூக்கா 4:13: பிசாசானவன் சோதனையெல்லாம் முடிந்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்.***

*சாத்தான் இயேசுவை, குறிப்பாக அவருடைய ஊழியத்தின் முடிவில், தடம் புரளச்செய்வதற்கு மீண்டும் முயற்சி செய்தான். அவன் நடப்பதையெல்லாம் நன்கு கவனங்கொடுத்துப் பார்த்திருந்து, நுட்பமாக இயேசுவைத் தவறச்செய்வதற்கு முயன்றான்.*

***நம்முடைய ஜீவியங்களில் கலங்கச்செய்யும் காரியங்கள் ஏற்படுமாயின், அவற்றைக் கையாள்வதற்கான நெறிமுறைகள் இதோ:***

***1 யோவான் 2:15 – 16: உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.***



***மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும்*** *நமது ஆவிக்குரிய பாதையில், தவிர்க்க முடியாதவகையில், நம்மைக் கலங்கச்செய்யும் காரியங்களாக இருக்கின்றன.*

*மனுக்குலத்திற்கு எதை வேண்டுமானாலும் தேர்வுசெய்யும் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதால், இது நம்மை கவலையடைச் செய்யும்படிக்கு*

*தூண்டிவிடக்கூடிய உணர்ச்சிகள் நம் அனைவருக்குள்ளும் இருப்பதை அர்த்தப்படுத்துகின்றது. ஆதாம் மற்றும் இயேசு என இருவருமே அவைகளைப் பெற்றிருந்தனர், இருவருமே பரீட்சிக்கவும்பட்டனர். ஆதாமுக்கு இருந்ததைப் போலவே மனிதனாகிய இயேசுவும் உணர்ச்சிகளைப் பெற்றிருந்தார்.*

*இது எளிமையானது. கவலையும், கலக்கமும் அடையும் சுபாவம் இயற்கையானதே. (ஆனால்) அதைக் கையாள்வதில் தேர்ச்சி பெறுவதே முக்கியமான காரியம்.*



***இயேசு முதன்முதலில் எப்பொழுது கலக்கமடைந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது? ஒரு பரிபூரண மனிதனில், இந்தக் கிளர்ச்சியானது, எப்படியாகக் காணப்படுகின்றது?***

*சுவிசேஷங்கள் கிட்டத்தட்ட இயேசுவின் மூன்றரை வருட ஊழியத்தின் அனைத்தையுமே பதிவு செய்கின்றன. சுவாரஸ்யமாக, அவருடைய ஊழியக்காலம் முழுவதும், இயேசு சில சமயங்களில் கோபமாகவும், எப்போதும் உறுதியாகவும், அன்பாகவும், கடின முயற்சியுடனும், மனதுருக்கத்துடனும், சிநேகத்துடனும், கவனஞ்சிதறாமலும் இருந்ததாகக் காண்கிறோம். இருப்பினும், முடிவு சமீபமானபோதோ, அவருக்கு அழுத்தமும் அதிகரித்தது.*

*இயேசு ஒரு பரிபூரண மனிதராக இருந்தபோதிலும், அவர் இன்னுமே அழுத்தத்தை அனுபவிக்க நேர்ந்தது, அதேசமயம் சாத்தானும் தனக்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதற்கு வகைதேடிக்கொண்டிருந்தான்.*

***யோவான் 11:*** *லாசரு கல்லறையில் நான்கு நாட்கள் காணப்பட்டார், அவருடைய சடலம் அழுகிக்கொண்டிருந்தது. இந்த லாசருவை உயிர்த்தெழுப்பின அற்புதமானது, இருக்கும் எல்லா அற்புதங்களிலேயே மிகவும் வியத்தகு அற்புதமாய் இருந்தது.*

***இத்தருணம் வரையிலும் அவரைச் சுற்றியிருந்த அந்தகாரத்தின் முழு ஆழத்திலிருந்து அவர் பாதுகாக்கப்பட்டு வந்தார்:***

***லூக்கா 4:28 – 30: ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்டபொழுது, கோபமூண்டு... எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள். அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்.***

***யோவான் 7:30: அப்பொழுது அவரைப் பிடிக்கவகைத் தேடினார்கள்; ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைப்போடவில்லை.***

*இயேசுவின் ஊழியம் முடிவடைவதற்கு முன்பே, ஜனங்கள் அவருக்கு முடிவுகட்டியே ஆக வேண்டும் எனுமளவுக்குச் சீற்றத்திலிருந்த பல நிகழ்வுகள் நடந்தேறின. அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் காப்பாற்றப்பட்டார். அவருடைய பாதுகாப்பாக இருக்கும் நிலையானது விலகவிருந்தது. லாசரு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்ட நிகழ்வுதான் அம்மாற்றத்தைச் செயல்படுத்தச்செய்தது.*

***இயேசுவுக்கு முன்பாக மூன்று கலங்கச்செய்திடும் பணிகள் இருந்தன.***

**கர்த்தருக்கு முன்பிருந்த கலங்கச்செய்திடும் பணி**



**தேர்ந்தெடுக்கப்பட்டவராய் அவர் பாவத்தையும், வியாதியையும், மரணத்தையும் தடுக்க /போக்க வேண்டியிருந்தது. இப்பொறுப்பின் பாரமானது கற்பனை செய்ய முடியாதளவுக்கு அதிகமான ஒன்றாக இருந்தது.**

***லாசருவை எழுப்பின காரியமானது, பாவத்தைச் சாகடிப்பதற்கு வழிவகுத்திட்ட நிகழ்வுகளின் சங்கிலித் தொடரொன்றைத் தொடங்கவிருந்தது. பாவத்தின் மீது வெற்றிச்சிறந்திடும் அப்பாதையோ தனிப்பட்ட சித்திரவதையையும், மரணத்தையும் அனுபவிப்பதன் மூலமாக அடையப்பட வேண்டியதாயிருந்தது:***

***யோவான் 11:30, 32 – 35: இயேசு இன்னும் கிராமத்திற்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார். … இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து, 'ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்' என்றாள். அவள் அழுகிறதையும், அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது, ஆவியிலே***

***கலங்கித் <5015>***
***துயரமடைந்து,***
***'அவனை எங்கே***
***வைத்தீர்கள்?'***
***என்றார்.***
***'ஆண்டவரே,***
***வந்து பாரும்'***
***என்றார்கள்.***
***இயேசு***
***கண்ணீர்***
***விட்டார்.***



***சாத்தானின் மறைமுகமான உட்பொதிந்துவந்த (embedded) சோதனையானது முதலாம் வனாந்தர சோதனையின் மாதிரியைப் பின்பற்றினதாய் இருந்தது:***

***மத்தேயு 4:3 – 4: அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து, 'நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்' என்றான். அவர் பிரதியுத்தரமாக:***

***‘மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே’ என்றார்.***

*வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: ‘நீர் தேவனுடைய குமாரனாக இருந்தால், வேறு யாராலும் செய்ய முடியாததை உங்களால் செய்ய முடியுமல்லவா! அப்படியானால் இதனைத் செய்திடுங்கள்! உங்களிடம் வல்லமை இருக்கிறதே; அதை நன்மைக்காகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்’ என்பதாகும்.*

***யோவான் 11:36 – 38: அப்பொழுது யூதர்கள்: ‘இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்’ என்றார்கள்! அவர்களில் சிலர்: ‘குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா?’ என்றார்கள். அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.***

***இயேசு ஏன் லாசருவை மரிப்பதிலிருந்து தடுக்கவில்லை என்று ஜனங்கள் கேள்வி எழுப்பினார்கள்.***

***கலக்கமாக இருக்கும்போது அது ஏதோவொரு முடிவினை / தீர்மானத்தை எடுக்க வைத்திடும். அப்படிப்பட்ட நேரத்தில் குறுக்கு வழியில் செல்வது எளிது. ஆனால் இயேசுவோ உயரிய அறத்தின் வழியிலேயே சென்றார்.***

***யோவான் 11:39, 41 – 44: இயேசு: ‘கல்லை எடுத்துப்போடுங்கள்’ என்றார். … அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: ‘பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன்’ என்றார். இவைகளைச் சொன்னபின்பு: ‘லாசருவே, வெளியே வா’ என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன்***

***வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: 'இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்' என்றார்.***

| **முதலாம் சோதனை**  | **லாசருவை எழுப்புதல்** |
|---|---|
| ***மத்தேயு 4:3 – 4:*** ***அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து, 'நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்' என்றான். அவர் பிரதியுத்தரமாக: 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே' என்றார்.*** | ***யோவான் 11:41 – 43:*** ***அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: 'பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன்' என்றார். இவைகளைச் சொன்னபின்பு: 'லாசருவே, வெளியே வா' என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.*** |

**இயேசுவின் முதலாம் சோதனைக்கும், லாசருவை எழுப்பினதற்கும் இடையே உள்ள தொடர்பு:**

- ***இயேசுவின் முதலாம் சோதனைக்கும் லாசருவை எழுப்பினதற்கும் இடையே உள்ள தொடர்பு இயேசுவின் பதிலிலேயே காணப்படுகின்றது – மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.***

- ***'பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்' (தேவன் அவரிடம் பேசியிருந்தார் என்பதை இது அர்த்தப்படுத்துகின்றது) என்று சொன்னதன் மூலமாக இயேசு தம்மைச்***

***சுற்றியிருந்த பார்வையாளர்களிடம் தாம் தேவனிடம் பேசிக்-கொண்டிருப்பதை அறிவித்தார்.***

• ***தேவனுடைய வார்த்தையே முதலாம் சோதனைக்கு இயேசு அளித்த பிரதியுத்தரமாக இருந்தது. லாசருவை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்புவதற்கும் இயேசுவுக்குத் தேவனுடைய வார்த்தை அருளப்பட்டது. பின்னர் இயேசு தேவனுடைய வார்த்தைகளைப் பேசினார் – லாசருவும் எழுந்து வந்தார். லாசரு சொல்லர்த்தமாகவே தேவனுடைய வார்த்தையினால் பிழைத்தார்.***

• ***லாசருவை எழுப்பினதற்கான கனத்தை அவரையே எடுத்துக்கொள்ளும்படியாக இயேசுவைத் தூண்டிடுவதற்குச் சாத்தான் முயற்சி செய்தான். ஆனால் ஒரு பலனுமில்லை, ஏனெனில் தேவனுடைய வார்த்தையே இயேசுவை இயக்கிக்கொண்டிருந்தது.***

*இயேசு வலுக்கட்டாயத்தின்கீழாக இருந்தபோதும்கூட, அவர் தேவனுக்கே மகிமையைச் செலுத்தினார்.*

*இதற்கு நேர் எதிர்மாறான உதராணம், மோசே இரண்டுதரம் கன்மலையை அடித்ததாகும்.*

***எண்ணாகமம் 20:9 – 11: அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: ‘கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ’ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.***

*மோசே தேவனுக்கு மகிமையைச் செலுத்துவதற்கு மறந்துவிட்டார், அதனால்தான் அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.*

*நம்மைச் சுற்றிலும் இருக்கும் தற்போதைய கொள்ளை நோய்களால் (அல்லது போர்களால், போராட்டங்களால்) நாம்*

மன அழுத்தத்தின்கீழ் இருக்கும்போது, நாம் எவ்வாறு தேவனை மகிமைப்படுத்துவதை நிறுத்தாமல் தொடர முடியும்? நாம் எவ்வாறு மன அழுத்தத்தைக் கையாள்வது? நாம் தேவபக்தியான ஒரு தீர்வைத் தேடுகிறோமா அல்லது தனிப்பட்ட ஒரு தீர்வைத் தேடுகிறோமா? இயேசுவோ தேவபக்தியான தீர்வையே தேடலானார்.

பொறுப்பின் பாரத்தால் இயேசு கலக்கமடைந்தார். அவர் எவ்வாறு அப்பாரத்தினைக் கையாண்டார்/சமாளித்தார்?

**இயேசு எவ்வாறு கலங்கின சிந்தைதனைக் கையாண்டார்?**

**இயேசுவால், தம்முடைய பிதாவைக் கூட்டத்தினருக்கு வெளிப்படுத்தவும், சத்தமாக ஜெபித்ததன் மூலமாக பிதாவுக்கே மகிமையை உரித்தாக்கவும் முடிந்தது. இது பரமண்டலத்தில் இருக்கும் தேவனுக்கு, சகலத்தின்மீதும் உச்சபட்ச அதிகாரம் உள்ளது என்பதைச் சகலருக்கும் சாட்சிப்பகர்ந்தது.**

பாவம் மற்றும் மரணத்தின் கடுந்துயரத்தால் இயேசு கலக்கமடைந்தார், தாம்தான் அதைச் சுமந்துதீர்க்க வேண்டியவர் என்பதின் பாரத்தை உணரலானார். மகிமை தமக்கல்லாமல், தேவனுக்கே செலுத்தப்பட்டதைச் சுற்றியிருப்பவர்கள் அறிந்துகொள்ளும்படியாக பார்த்துக்கொண்டார்.

**(ஒவ்வொருவரும் தனக்குள்ளே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி:)**
தேவனை மகிமைப்படுத்தும் பணியை எதிர்கொள்ளும்போது நான் என்ன செய்கிறேன் அவரை மகிமைப்படுத்துகிறேனா அல்லது அதை எனக்கென்று வைத்துக்கொள்ளுகின்றேனா? நான் மனத்தாழ்மையாய் இருக்கின்றேனா?



**இயேசு உள்ளுணர்வால் உந்தப்பட்டுத் தாமாகவே தேவனுக்கு மகிமையைச் செலுத்தினார்.**
**சாத்தான் அடுத்து எப்போது மற்றும் எப்படி அவரைத் தடம்புரளச் செய்வதற்கு முயற்சி செய்தான்? என்பதைப் பார்க்கலாம் வாருங்கள்!**

*யோவான் எழுதிய சுவிசேஷம் இயேசுவின் மனிதத்தன்மையை தனித்துவமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது.* ***யோவான் 12ம்*** *அதிகாரமானது இயேசுவின் அடுத்த கலக்கமான அனுபவத்தை வெளிப்படுத்துகின்றது. இது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இரட்சிப்பின் பாரத்தைத் தம்மால் கையாள முடியும் என்பதை இயேசு காட்டினார், அத்துடன் இன்னும் பெரியதான வேறொரு சவால் அவருக்கு வர இருந்தது.*

***சாத்தானின் மறைமுகமான உட்பொதிந்துவந்த (embedded) சோதனையானது இரண்டாம் வனாந்தர சோதனையின் மாதிரியைப் பின்பற்றினதாய் இருந்தது:***

***மத்தேயு 4:5 – 7:*** **அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: 'நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது' என்று சொன்னான். அதற்கு இயேசு: 'உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே' என்றார்.**

*நிச்சயமாக ஜனங்கள் தம்மை வணங்க வேண்டும் என்று இயேசு விரும்புவார் என நினைத்து, சாத்தான் இயேசுவை அனைவரும் பார்க்கக்கூடிய இடத்தில் – பரிசுத்த நகரத்தில் – வைத்தான்!*

*அதற்கு இயேசுவோ –* **'உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக'** *என்று பதிலளித்தார்.*

*இப்போது நாம் இயேசுவினுடைய ஊழியத்தின் முடிவிற்கு வேகமாக கடந்துசெல்லலாம். லாசருவை மரணத்திலிருந்து எழுப்பின ஒரு வாரத்திற்குப் பிறகு, இயேசு அடுத்த கலங்கச்செய்திடும் பணியை எதிர்கொள்ளலானார்.*

**கர்த்தருக்கு முன்பிருந்த கலங்கச்செய்திடும் பணி**



**எல்லோருக்கும் இரட்சிப்பை வழங்கிட வேண்டும் எனும் மிகப்பெரிய பாரத்தை தாமே நேரடியாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது.**

***யோவான் 12****ன் சூழல் :– அனைவரும் பார்க்கும்படியாக இயேசு எருசலேமுக்குள் அப்போதுதான் வெற்றிபிரவேசம் செய்து, இலட்சக்கணக்கான ஜனங்களால், சகலர் முன்னிலையில், இராஜாவாக அறிவிக்கப்பட்டார். அவர்கள் அவருக்கு முன்பாக குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டும், மரக்கிளைகளைத் தறித்து அவருக்கு முன்பாக பரப்பிக்கொண்டும், "ஓசன்னா!" என்று சத்தமிட்டும்கொண்டிருந்தார்கள். ஓசன்னா என்கிற வார்த்தையானது "இப்போதே இரட்சியும் / Save Now" அல்லது "எங்களை இரட்சியும் / Save Us" என்று பொருள்படும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்ததாகும்.*

***இயேசு அந்த மகிமையின் இன்ப உணர்வில் திளைத்தாரா?***



***யோவான் 12:20 – 23: பண்டிகையில் ஆராதனை செய்யவந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள். அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: 'ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்' என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள். பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: 'மனுஷகுமாரன் மகிமைப்படும் படியான வேளை வந்தது' என்றார்.***

*ஒருவேளை கிரேக்கர்களிடமிருந்து வந்த, கவனத்தைச் சிதறச்செய்யும் வண்ணமாக இருந்த காரியத்தை இயேசு புறக்கணித்திருக்கலாம். அக்காலம் அவர்கள் அவரைப் பின்தொடருவதற்கான காலமாய் இருக்கவில்லை. காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாருக்காகவே அவர் வந்திருந்தார்* ***(மத்தேயு 15:24)****. இயேசுவின் பதிலைப் பார்த்தப் பிறகு இக்கருத்துக்குத் திரும்ப வரலாம்.*

*நம்முடைய வாழ்வில் நாம் ஒரு கலங்கச்செய்யும் அனுபவத்திற்குள்ளாகும்போது, நாம் எப்போதும் ஒரு சாலைகளின் சந்திப்புக்கு (crossroad) வர நேரிடுகின்றது. (அதாவது, எப்பக்கம் போக வேண்டுமென முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு வர நேரிடுகின்றது.)*

*இயேசு அப்போதுதான் அந்த நகரத்திற்குள் பிரவேசித்திருந்தார், மேலும் கவனத்தை ஈர்த்திடும் மையப்புள்ளியாகவும் காணப்பட்டார். கிரேக்கர்கள் அவரைப் பார்க்க விரும்பினார்கள். இயேசு அவர்களை நோக்கி: 'மனுஷகுமாரன் மகிமைப்படும் படியான வேளை வந்தது' என்றார்.*

***இதோ அந்த மிகவும் கலங்கச்செய்வதாய் இருக்கும் நுட்பமான முடிவெடுக்கும் நிலை:***

***யோவான் 12:24, 27 – 29: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த***

**பலனைக்கொடுக்கும். இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது *<5015>*, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ...**

*நூறாயிரக்கணக்கான ஜனங்கள் சத்தமிட்டு, அவரைப் போற்றி அவரைப் பின்பற்றுவதற்குத் தயாராக இருந்தார்கள், அதனைப் பின்தொடர்ந்தே கலங்கச்செய்யும் சூழலும் வந்தது. வெளிநாட்டினர் கூட (கிரேக்கர்கள்) அவருடன் பேச விரும்பினார்கள். தம்முடைய அனுபவமானது, அந்தச் சமயத்தில் கிடைத்துக்கொண்டிருந்த மகிமையில் திளைப்பது பற்றினதல்ல, மாறாக, தாம் மரிப்பதைப் பற்றினது என்பதால் இயேசு அவர்களிடம் பேசாமல் இருந்திருக்கக்கூடும். நான் மரிக்கவில்லை என்றால், என்னைப் பின்பற்றுபவர்களுக்கு மீண்டும் ஜீவன் கிடைக்காது என்று அவர் கூறினார்.*



| **இரண்டாம் சோதனை** | **பரிசுத்த நகரத்திற்குள் இயேசுவின் வெற்றிபிரவேசம்** |
|---|---|
| ***மத்தேயு 4:5 – 6:***<br>***அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: ‘நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது’ என்று சொன்னான்.*** | ***யோவான் 12:12 – 15:***<br>***மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ‘ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்’ என்று ஆர்ப்பரித்தார்கள். அல்லாமலும்: ‘சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் இராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார்’ என்று எழுதியிருக்கிறபிரகாரமாக, இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்.*** |

**இயேசுவின் இரண்டாம் சோதனைக்கும் இயேசு பரிசுத்த நகரத்திற்குள் வெற்றிபிரவேசம் செய்ததற்கும் இடையே உள்ள தொடர்பு:**

• **இயேசுவுக்கான சாத்தானுடைய இரண்டாம் சோதனையில், பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் (எருசலேம்) கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிற்க வைத்தான்.**

• **இயேசுவினுடைய ஊழியத்தின் முடிவில், அவர் பரிசுத்த நகரத்திற்குள் சகலஜனங்களுக்கும் முன்பாக வெற்றிபிரவேசம் செய்தார்.**

• **சாத்தான் எதில் அவரைச் சிக்க வைக்க முயன்றுகொண்டிருந்தானோ, அது சொல்லர்த்தமாகவே இயேசுவினுடைய ஊழியத்தின் முடிவில் நடந்தது. அந்தத் தருணத்தில் தாம் அவர்களின் இராஜாவாக இருக்கிறோம் எனும் மகிமையைத் தாமே எடுத்துக்கொள்வதற்கான சோதனை அவருக்கு இருந்தது, ஆனால் அவரோ தம்மை அல்ல, தேவனையே மகிமைப்படுத்தினார்.**

**மனுக்குலமானது விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது – இதுவே இயேசுவினுடைய பணியின் பாரமாக இருந்தது:**

*'... ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். **பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்**' என்றார். **(அவர் வாய்விட்டுச் சத்தமாக பேசினார்).** அப்பொழுது: '**மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்**' என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: 'இடிமுழக்கமுண்டாயிற்று' என்றார்கள். வேறுசிலர்: 'தேவதூதன் அவருடனே பேசினான்' என்றார்கள்.*



***இயேசு சொன்னதை வானத்திலிருந்து வந்த இந்தச் சத்தமானது உறுதிப்படுத்தியது.***

***இயேசுவின் ஊழியத்தில், வானத்திலிருந்து இயேசுவைக் குறித்து ஒரு சத்தம் உண்டானது இது மூன்றாவது முறையாகும். சத்தம் உண்டான ஒவ்வொரு முறையும், அது அப்போதைக்கு என்ன சம்பாஷணைப் போய்க்கொண்டிருந்ததோ அதனை விரிவுபடுத்திக் காண்பித்தது.***

- ***முதன்முதலாக இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது:*** *'இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில்* ***[இயேசுவை மேசியாவாக அறிமுகப்படுத்துவதற்கு]*** *நான் பிரியமாயிருக்கிறேன்.'* ***(மத்தேயு 3:17)***
- ***இரண்டாவதாக மறுரூபமலையில்: '… இவருக்குச் செவிகொடுங்கள்!' (மத்தேயு 17:5) இயேசுவே அந்த மேசியா என்பதையும், ஜீவனுக்கான வழி என்பதையும் உறுதிசெய்திடுவதற்காக சத்தம் உண்டானது.***
- ***மூன்றாவதாக: 'மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்' (யோவான் 12:28) – மீண்டும் இயேசுவே அந்த மேசியா என்பதையும், தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருபவர் என்பதையும் உறுதிப்படுத்தியது.***

***அடுத்து இயேசு சொன்னது இதோ:***

***யோவான் 12:30 – 32: இயேசு அவர்களை நோக்கி: 'இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று. இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்' என்றார்.***

*இங்கே இயேசு, சாத்தான் தோல்வியடையப் போவதையும், இரட்சிப்பு சமீபமாயிருக்கிறதைப் பற்றியும் அறிவித்துக்கொண்டிருந்தார்.*

*சாத்தானோ இயேசுவை ஜனக்கூட்டத்திற்கு அடிபணியச்செய்து, அவரை அவர்களின் தலைவராக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தான். 'உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக' என்பதே இயேசுவின் அணுகுமுறையாக இருந்தது.*

***ஜனங்களுக்கு தாம் வெளிச்சமாக இருப்பதைப் பற்றி இயேசு இன்னும் கொஞ்சம் பேசிய பிறகு, அவர் பின்வருமாறு கூறி முடித்தார்:***


***யோவான் 12:36: 'ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்' என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்.*** *(அவருடைய வேளை இன்னும் வரவில்லை.)*

**இயேசு எவ்வாறு கலங்கின சிந்தைதனைக் கையாண்டார்?**

***தாம் செய்துகொண்டிருந்த பணியின் அளவைக் கண்டு இயேசுவின் உள்ளம் கலங்கியது. ஆனாலும் அவர் தாம் செய்திருந்த அர்ப்பணிப்பின்மீதே கவனத்தைச் செலுத்தினார், மேலும் தேவனும் இயேசுவின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தினார்.***

***சரி! நாம் என்ன செய்வோம்? நாம் கலங்கும்போது நம்முடைய அர்ப்பணிப்பை இரட்டிப்பாக்குகிறோமா அல்லது முடங்கிவிடுகிறோமா அன்பர்களே?!***

***இது என்னே ஒரு நடைமுறைசார்ந்த விழித்தெழச்செய்திடும் அழைப்புமணியாய் இருக்கின்றது!***



*இரட்சிப்பின் பாரத்தைக் கையாளுவதற்கான இயேசுவின் திறமையானது, "அழுத்தத்தின் கீழும் நிதானமாயிருத்தல்" என்பதற்குப் புதிய அர்த்தமொன்றைக் கொடுக்கின்றது.*

***இயேசு அதுவரையில் தமக்களிக்கப்பட்ட இரட்சிக்கும் பணியின் பாரத்தையும், அதின் வீரியத்தையும் ஏற்றுக்கொண்டிருந்தார். அடுத்து என்ன நடந்திருக்கும்? வாருங்கள் பார்க்கலாம்.***

*இயேசுவுக்கும்சரி நமக்கும்சரி, சாத்தான் எப்போதுமே நமக்கு ஏற்படும் மாம்சீக கஷ்டங்களையும் சிரமங்களையும் உன்னிப்பாகக் கவனத்துவருகிறான், அதோடுகூட சந்தேகத்தையும் தோல்வியையும் கொண்டுவரும் விதமாக, அவைகளை நமக்கெதிராகவே பயன்படுத்தவும் முயன்றிடுவான்.*

*சாத்தானுக்கு நாம் எவ்வாறு எதிர்வினையாற்றிடுவோம் (respond)? நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்வோமா அல்லது நம்முடைய பாதையை நாமே தீர்மானித்துக்கொள்வோமா?*

*இப்போது நாம் **யோவான் 13**க்கு வரலாம். சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு, இயேசு தம்முடைய நெருங்கிய சிநேகிதர்களுடன் கடைசியாக ஒருமுறை ஐக்கியங்கொள்வதற்காக அவர்களுடன் மேல்வீட்டறைக்கு வந்திருந்தார். இயேசு மீண்டும் கலக்கமடைந்தார், சாத்தான் அவர்மேல் பாய்வதற்கு அங்கேயும் காணப்பட்டான்.*

***சாத்தானின் மறைமுகமான உட்பொதிந்துவந்த (embedded) சோதனையானது மூன்றாம் வனாந்தர சோதனையின் மாதிரியைப் பின்பற்றினதாய் இருந்தது:***

***மத்தேயு 4:8 – 10: மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல இராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: 'நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்' என்று சொன்னான். அப்பொழுது இயேசு: 'அப்பாலே போ***

***சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே' என்றார்.***

*தனிப்பட்ட மகிமையையும், கனத்தையும், சகல உலக இராஜ்யங்களையும் இயேசு அடையவேண்டுமானால், 'சாஷ்டாங்கமாய் விழுந்து, அவனைப் பணிந்துகொள்ள வேண்டும்!' எனும் ஒரு குறுக்கு வழியை சாத்தான் முன்வைத்தான். ஒருவேளை இயேசு இதனைச் செய்திருந்தால், அவரால் தமக்கு முன்பிருந்த ஊழியத்தின் வலியையும், துன்பத்தையும், இறுதியில் தாம் அடையவிருந்த மரணத்தையும்கூட தவிர்த்திருக்க முடியும். இது அவருடைய ஊழியத்தின் துவக்கத்தில் ஏற்பட்ட சோதனையாக இருந்தது. ஆனால் இயேசுவின் பதிலோ தேவனை மாத்திரமே பணிந்துகொள்வதாக இருந்தது. எப்படி இந்த அனுபவம் அவருடைய ஊழியத்தின் முடிவில் பொருந்துகிறதாய் இருக்கின்றது? பதிலை விரைவிலேயே பார்க்கப்போகிறோம்.*

## கர்த்தருக்கு முன்பிருந்த கலங்கச்செய்திடும் பணி



**அது என்னவெனில், தம்முடைய இறுதி விசாரணையானது இன்னும் சில மணிநேரங்களில் நடக்கவிருக்கிறது என்பதை அறிந்திருப்பதும், தம்முடைய நம்பிக்கைக்குரிய சிநேகிதனே தம்மைச் சிலுவையில் அறையப்போகிறவர்களின் கைகளில் தம்மை ஒப்படைக்கப்போகிறான் என்கிற உண்மையை எதிர்கொள்ள வேண்டியிருந்ததே அந்தப் பணியாகும். நமது ஆண்டவர் என்னே ஓர் ஆழமான தனிப்பட்ட விலையைக் கொடுத்திருக்கிறார்.**

***யோவான் 13:19 – 35: (தேர்ந்தெடுக்கப்பட்ட வசனங்கள்) 'அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை***

**ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றார். இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி *<5015>:* 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்று சாட்சியாகச் சொன்னார்.**

*'நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்' – ஒருவேளை யூதாஸ் தாம் அனுப்பின ஒருவனாக, தம்முடைய உண்மையுள்ளவர்களுடன் கூட அவனும் அமர்ந்திருப்பதைக் கண்டு அவர் கலக்கமடைந்திருக்கலாம். அவருடன் கூடவே இருந்த சிநேகிதனாகிய யூதாஸ், அவரைக் காட்டிக்கொடுப்பதற்குத் தயாராய் இருந்தான். அவன் இயேசுவுடன் கூடவே பல ஆண்டுகளாய்ப் பயணம் செய்தவன்.*

**இங்குள்ள முடிவெடுக்கும் நிலை *(crossroad)* துரோகத்தினுடையதாய் இருக்கிறது – நாம் நமது வலியின் காரணமாக வசைபாடுவோமா அல்லது தேவனுடைய மேற்பார்வைக்கு இணங்கிவிடுவோமா?**

***22* அப்பொழுது 'யாரைக்குறித்துப் பேசுகிறாரோ' என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள்.**

**இயேசுவிடம் 'அது யார்?' என்று விசாரித்தார்கள். இயேசு ஒருபோதும் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுடைய பெயரைச் சொல்லவில்லை;** *அவர் வெறுமனே தமது அப்பத்தை*



*அவனுடன் பகிர்ந்துகொள்ள மாத்திரம் செய்தார். ஆழ்ந்த நட்பின் அடையாளமாக இருக்கும் உணவைப் பகிர்ந்து கொள்ளும் காரியத்தின் மூலமாக, தனிப்பட்ட நட்பின் பிணைப்பை விரிவுபடுத்தினார்.*

***27 அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: 'நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்' என்றார். 28 அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை. 30 அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.***

*சாத்தான் புறம்பாகத் தள்ளப்பட்டான்! இந்தச் சோதனை சொந்த குடும்ப உறுப்பினரிடமிருந்து வந்தது – இது தனிப்பட்ட வகையில் (personal) இருந்தது. இது அவருடைய இருதயத்தைக் காயப்படுத்தியது. இயேசுவுக்கே இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கின்றதென்றால், நமக்கும்கூட ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்குமல்லவா?!*

*இது நாம் முன்பு பார்த்த, வனாந்தரத்தில் நடந்த சோதனைக்கே கூட்டிச்செல்கின்றது.*



| **மூன்றாம் சோதனை** | **காட்டிக்கொடுக்கப்படுதல்** |
|---|---|
| ***மத்தேயு 4:8 – 9:***<br>***மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல இராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: 'நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்' என்று சொன்னான்.*** | ***யோவான் 13:27:***<br>***… அப்பொழுது இயேசு அவனை நோக்கி: 'நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்' என்றார்.*** |

**சாஷ்டாங்கமாய் விழுந்து, சாத்தனைப் பணிந்துகொள்வதும், அதன் மூலமாக இயேசு தமக்கு முன்பிருந்த இரட்சிப்பின் பணியின் வலிவேதனையெல்லாம் அனுபவிக்க வேண்டாம் என்பதே அவருக்கு முன்வைக்கப்பட்ட சோதனையாக இருந்தது:**

• **இயேசு துரோகத்தின் வேதனையை அனுபவிக்க தயாராக இருந்தார். 'நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்' – வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால்: 'சாத்தானுக்கேற்ற பொய்களைப் பிரதிநிதித்துவம் செய்பவனே, போ. நீ செய்வது முக்கியத்துமற்றுப் போகும் என்பதினால் இங்கே இருந்து செல். *நானோ தேனுடைய சித்தத்தைச் செய்வதில் உறுதியாயிருக்கிறேன்'* என்பதாகும்.**

***துரோகத்தின் சக்திவாய்ந்த வலியையும், அதனை ஜெய்திட்ட தேவனுடைய சித்தத்திற்கான சக்திவாய்ந்த வைராக்கியத்தையும் நாம் இங்கே காண்கிறோம்!***

*அந்தஷணத்தின் வலி ஆழமானதாயிருந்தாலும், இயேசு இரண்டு இடங்களில் கவனம் செலுத்தலானார்.*

***முதலில், தம்முடைய பிதாவின் மீது :***

***31 அவன் புறப்பட்டுப்போனபின்பு இயேசு: 'இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். 32 தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்' என்றார்.***

*இதற்கும் லாசருவின் கல்லறையினிடத்தில் ஏற்பட்ட அனுபவத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமையை நாம் காண்கிறோம்: அங்கேயும் தேவன் மகிமைப்படுத்தப்படவிருந்தார். எருசலேமுக்குள் வெற்றிபிரவேசம் செய்த அனுபவத்திலும்: தேவன் மகிமைப்படுத்தப்படவிருந்தார். அதேபோல இங்கே பதினொருவருடனும்கூட, தேவனை மகிமைப்படுத்துவதுதான் காரியமாக இருந்தது. தம்முடைய இருதயத்தின் ஆழ்ந்த கவலையின் ஊடேயும் இயேசுவின் கவனம் இதுவாகத்தான் இருந்தது.*

***இரண்டாவதாக, இயேசு தம்முடைய இன்னமும்-உண்மையுள்ள சீஷர்களாயிருந்தவர்கள் மீது கவனம் செலுத்துகிறார்:***

***33 'பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன். 34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். 35 நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்' என்றார்.***

*இயேசு தம்முடைய அனுபவத்தை ஒருவரிலொருவர் அன்புகூருவதற்கான ஒரு பாடமாக மாற்றினார். தனிப்பட்ட விதத்தில் அவருக்குள் வலி இருந்தபோதும், அவர் சுயநலமில்லாமல் செயல்பட்டார்.*

**இயேசு எவ்வாறு கலங்கின சிந்தைதனைக் கையாண்டார்?**

***தம்முடைய தனிப்பட்ட இழப்பினுடைய ரண வேதனை மிகவும் அதிகமாய் இருந்த போதும், தமக்காக தேவன் வகுத்திருந்த பாதையின்மீதே இயேசு கவனமாக இருந்தார், அதினால் அவரால் தம்முடைய உண்மையான சீஷர்களை அன்பின் உயரிய தரநிலைக்கு உயர்த்தவும் முடிந்தது.***

*இது இயேசுவுக்குத் தனிப்பட்ட முறையில் கடினமானதொரு அனுபவமாக இருந்தது. சாத்தான் எந்த வழியிலாவது அவரைப் பிடித்துவிடலாம் என முயன்றுகொண்டிருந்தான், ஆனால், கர்த்தரோ தம்முடைய*

*பிதாவுக்கும், தம்முடைய பின்னடியார்களுக்கும் உண்மையாக காணப்பட்டார்.*

*அப்படியானால், நாம் எப்படிப்பட்டவர்கள்? ஒருவேளை நமக்கு கலங்கச்செய்திடும் துரோகத்தின் அனுபவங்கள் ஏற்படுமாயின் அவற்றை நாம் எவ்வாறு கையாளுவோம்? கிறிஸ்துவின் முன்மாதிரியையே பின்பற்றுவீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.*

*நாம் நம்முடைய தவறுகளிலிருந்தும், இயேசுவின் உண்மைத்தன்மையின் முன்மாதிரியிலிருந்தும் (பாடங்களைக்) கற்றுக்கொள்கிறோம். இவற்றை ஒன்றாக இணைத்துப்பார்த்தால், கிறிஸ்துவுக்குள்ளாக வளர்வதற்கான வழியை நம்மால் காண முடியும்.*

***துரோகத்தின் ஆழங்களுக்கே சென்றிருந்தாலும்கூட இயேசு திடமாக நின்றார். இதுவே நமக்குத் தேவைப்படும் முன்மாதிரியாகும்.***

***மூன்று ஆழமான மற்றும் தனிப்பட்ட முறையில் கலங்கச்செய்திட்ட அனுபவங்களை இயேசு ஜெயமாக மேற்கொண்டதை நாம் இதுவரைக்கும் பார்த்திருக்கிறோம். அடுத்து அவர் என்ன செய்யவிருந்தார்? வாருங்கள் பார்க்கலாம்.***

*இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய இந்த ஆராய்ச்சியினை, ‘அவர் நம்முடைய நாயகர்’ என்று சொல்லித் தொடங்கினோம். இந்த அனுபவங்களெல்லாம் சுமார் மூன்று வாரங்களளவும் நீடித்தது; மேலும் இவற்றோடுகூட, அனைவருக்கும் மீட்கும்பொருளாக இருப்பதினுடைய பாரம், வீரியம் மற்றும் தனிப்பட்ட இழப்பு என்பவையும் அவரைக் கலங்கச்செய்தன. இயேசு இவற்றைக் கச்சிதமாகக் கையாண்டதோடுகூட ஒரு நாயகர் என்ன செய்வாரோ அதையே அவரும் செய்தார் – ஆம் அதேதான்! அவர் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்திட்டார்.*

*நம்மை விட பெரியதாக இருக்கும் ஒன்றின் ஒரு பகுதியாக நாம் இருக்கிறோம். வாழ்க்கை உங்களுக்காகத்தான் இருக்கின்றது*

*– (கிடைக்கின்ற) பாடங்களும் அனுபவங்களும் நித்தியத்துக்கும் நமக்கு உதவிடும். பாவம் மற்றும் மரணத்தின் அனுபவத்திலிருந்து கிடைக்கும் பாடத்தைக் கற்றுக்கொண்டு அதைவிட மேலே உயர எழும்பப் பாருங்கள். தேவனுடைய அழகான சிருஷ்டிகளிடமிருந்து நாம் உத்வேகத்தை (inspiration) உணர வேண்டும்/ மன எழுச்சிக்கொள்ள வேண்டும்.*

*ஆவிக்குரிய தளத்தில், இயேசுவின் முன்மாதிரியும், அவர் ஆழ்ந்த மன கலக்கத்துக்கு ஆளானபோது ஏற்பட்ட மூன்று இருதயத்தை நொறுக்கும் அனுபவங்களும் நம்மிடம் உள்ளன.*

*இயேசு ஞானஸ்நானம் பெற்றவுடன், உபவாசிக்கவும், ஜெபம்பண்ணவும் செய்தார், அதன்பிறகு (சோதனைக்காரனால்) சோதிக்கப்பட்டார் – பின்னர் உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்கு முன்வைக்கப்பட்ட பாதையில் முன்னேறிச்செல்ல அவரைப் பலப்படுத்துவதற்கேதுவாக அவருக்குப் பணிவிடைபுரிந்தனர்.*

***இப்படியாக சாத்தான் (ஒரு காலமளவும்) வீழ்த்தப்பட்டான், மேலும் சுவிசேஷமும் பிரசங்கிக்கப்படத் துவங்கியது:***

**கலங்கச்செய்திட்ட பணி நிறைவேற்றப்பட்டது.**



**யோவான் 14ம் அதிகாரமானது சுயத்தின் மீது இயேசு அடைந்த அபார வெற்றியை நமக்குக் காட்டுகின்றது.**

***மத்தேயு 4:11: அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.***

*தேவன் அனுப்பிய ஆவிக்குரிய உதவியால் இயேசு ஊக்குவிக்கப்பட்டார். மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, சாத்தான் மீண்டும் மேசியாவின் உண்மைத்தன்மையை தடம்புரளச்செய்வதற்காக முயற்சி செய்யவிருந்தான். இயேசு மீண்டும் அவனை வீழ்த்தவிருந்தார், இம்முறையோ என்றென்றைக்குமாக வீழ்த்தவிருந்தார்.*

***தாம் ஜெயங்கொண்டதைப் போலவே நாமும் ஜெயங்கொள்ள முடியும் என்று இயேசு நமக்கு உறுதியளிக்கின்றார்! அவர் என்ன கூறுகிறார் என்றால்: 'நீங்கள் கடந்துசென்றுகொண்டிருக்கும் சூழ்நிலையை நான் தனிப்பட்ட விதத்தில் அறிந்துள்ளேன், ஆகையால்–***

***யோவான் 14:1 – 3: 1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக <5015>; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.***

*இயேசு என்ன கூறுகிறார் என்றால்: 'நானும் இம்மாதிரி அனுபவங்களில் இருந்திருக்கிறேன், எனவே என்னை நம்புங்கள் (விசுவாசியுங்கள்)! இதன் ஊடே உங்களைச் சுமந்துசெல்வதற்கு என்னால் முடியும்!' என்பதாகும்.*

***2 என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3 நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.***

*கிடைக்கப்போகும் பரிசுக்கு நாம் அனுபவிக்கிற அனைத்துமே தகுதியானவைதான்! நமக்கான இலக்கைப் பாருங்கள், இறுதி பலனின்மீது கவனம் செலுத்துங்கள்.*



***நம்முடைய வாழ்விலும், இருதயத்திலும் ஏற்படும் கவலையின் வலியை இயேசு அறிவார்.***

***அவர் ஏற்கனவே இம்மாதிரியான அனுபவங்களில் இருந்துள்ளபடியால், நம்மால் அவருடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.***

***நம்மை வழிநடத்துவதற்கான தேவனுடைய மேற்பார்வையை நாம் பெற்றிருப்போம் என்று இயேசு நமக்கு உறுதியளிக்கின்றார்.***

***யோவான் 14:25 – 26: 25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். 26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (நினைப்பூட்டும்).***

*இயேசுவின் பின்னடியார்கள் தங்கள் பலவீனங்களுக்கு மேலாக எழுந்து வருவதற்கான பெலத்தினை பரிசுத்த ஆவியின் மூலமாக பெற்றுக்கொள்கிறார்கள். இதுவே சாத்தானின் அக்கினியாஸ்திரங்களைத் தவிர்ப்பதற்கு நமக்கு வேண்டியதாயிருக்கிறது. எப்படிச் சாத்தான் இயேசுவைப் பிடிப்பதற்கு முயன்றுகொண்டிருந்தானோ அதுபோலவே, இப்போது இயேசுவின் அடிச்சுவடுகளை உண்மையாகப் பின்பற்றிக்கொண்டிருப்பவர்களையும் பிடிப்பதற்கு முயன்றுகொண்டிருக்கிறான். ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு தேவனுடைய திட்டம் அவர்கள் மூலமாக நடந்துவருகிறது என்பதால் அவர்களே அவனுடைய இலக்காக இருக்கின்றார்கள்* ***(2 கொரிந்தியர் 5:18).***

***அவர் நமக்குக் கொடுத்திடும் சமாதானமே கலங்கிய ஆத்துமாவுக்கான மாற்றுமருந்தாக இருக்கிறது என இயேசு நமக்குக் காட்டுகின்றார்.***

***யோவான் 14:27 – 31: 27 'சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் <5015> பயப்படாமலும் இருப்பதாக. 28 நான் போவோன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். 29 இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன். 30 இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. 31 நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்' என்றார்.***

*இந்தச் சமாதானம் அவர் தம்முடைய கலங்கின மனித ஆவியைக் கையாண்டதன் மூலமாக கிடைத்தது. தேவனுடைய மேற்பார்வை அவர்மீது இருந்ததினாலும், அவர் மூலமாக அது செயல்பட்டதினாலும், அது அவரை மேலே உயரச்செய்தது, மேலும் அது நம்மால் கற்பனை செய்ய முடியாத வழிகளில் அவரை உண்மையுள்ளவராக இருக்கவும் செய்தது. இயேசு நம்மிடம் பின்வருமாறு சொல்லிக்கொண்டிருந்தார்: 'உங்கள் இருதயம் கலங்கப்போவதை நான் அறிவேன். எனவே, நான் எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொண்டு, அதன்மூலமாக உங்களுக்கு உதவவுள்ளேன்' என்பதேயாகும்.*

***தம்முடைய ஊழியத்தின் முடிவிலிருந்த இயேசுவைப் பற்றி பேசும் இந்தத் தீர்க்கதரிசனத்தை இது நமக்கு நினைப்பூட்டுகின்றது:***

***ஏசாயா 50:6 – 7: அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும்,***

**தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்** *(திடமான உறுதியையும் கவனத்தையும் கொண்டிருந்தேன்).*

*அவர்மீதிருந்த பாரத்தையும், அழுத்தத்தையும் நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. அவர் தமக்கு நெருக்கமானவர்களை மாத்திரம் இரட்சிக்கவில்லை; மாறாக, வாழ்ந்த, வாழ்ந்துகொண்டிருந்த, வாழப்போகிற ஒவ்வொரு ஆண், பெண், குழந்தைகள் எனச் சகலரையும் இரட்சிக்கவிருந்தார். இது இயேசுவின் வார்த்தைகளிலும் செயல்களிலும் இருந்த திடமான உறுதிப்பாடைக் காட்டுகின்றது:* ***'பயப்படாதிருங்கள். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.'***



- ***லாசருவை எழுப்புதல்:*** *உலகத்தார் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்படும் வாய்க்காலாக இருப்பதன் பாரத்தை அவர் சுமந்துகொண்டிருந்தார்.*

- ***எருசலேமுக்குள் வெற்றிபிரவேசம்:*** *அவர் பிரபலமாக இருந்தார். எல்லோரும் அவரைப் பின்தொடர்வதற்கு விரும்பினார்கள், ஆனால் அவரோ தம்மை மறைத்துக்கொண்டார். தாம் அல்ல, தேவன் மகிமைப்படுவதற்கே நாடினார்.*

- ***நெருங்கிய நண்பரால் காட்டிக்கொடுக்கப்பட்டார்:*** *வலியை மேற்கொள்ளுவதற்கான தம்முடைய திறனுக்குக் காரணம் தேவனே என்பதை அவர் உறுதிசெய்தார்.*

***தம்முடைய அனைத்து கலக்கமான அனுபவங்கள் முழுவதிலும், அவர் தமக்கான தேவனுடைய பணியின்மீதே கவனம் செலுத்தி வந்தார்.***

**இயேசுவின் பின்னடியார்கள் கலங்கின சிந்தைதனை எவ்வாறு கையாள்வது?**

**நம்முடைய அதிஆழமான, மிகக்கடுமையான, மிகவும் கலங்கச்செய்திடும் அனுபவங்கள் எதுவாக இருக்கட்டுமே, அவற்றையெல்லாம் இயேசு அறிந்திருக்கிறார் என்றும், தேவன் நமக்குச் செவிசாய்க்கிறார் என்றும் நாம் உறுதியாக நம்புவோமாக.**

*(மருத்துவரீதியான மனச்சோர்வு/மன அழுத்தம் மற்றும் பதட்டம் உள்ளவர்களுக்கு கூடுதலான உதவி தேவைப்படுமென நாங்கள் நினைக்கிறோம்.)*

***எபிரெயர் 4:15 – 16: நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.***

*சக்திவாய்ந்த வேதவாக்கியம்! எபிரெயருக்கு எழுதின நிருபமானது யோவான் 11, 12, 13 மற்றும் 14 ஆகிய அதிகாரங்களின் சுருக்கத்தை வழங்குகின்றது. பாவமில்லாதவராயிருந்தும்*

நம்மைப் போலவே சோதிக்கப்பட்ட பிரதான ஆசாரியரே நமக்கிருக்கின்றார்.

***இயேசுவே நம்முடைய தலைவரும், நம்முடைய எஜமானருமானவர், நாம் எவ்வளவு கலங்கியிருந்தாலும்சரி, கவலைப்பட்டிருந்தாலும்சரி, நாம் சகலத்தையும் அவரிடம் சுமந்து செல்லலாம். அவரும் அம்மாதிரியான அனுபவங்களில் இருந்திருக்கிறார், அதிலெல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவராகவும் வாழ்ந்து காண்பித்திருக்கிறார். அவர் உலகத்தை இரட்சிப்படையும்படிக்கு உயர்த்துவார். மனிதனாகிய இயேசு எனும் சொல்லிமுடியாத ஈவுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்!***

***தேவனுடைய ஆவியைத் தாம் கொண்டிருந்தபோதிலும், உலகை இரட்சிப்பதற்கான மாபெரும் அழுத்தத்துடன் ஒரு மனிதனாக அவர் பாடுபட்டார் பிரியமானவர்களே!***



## கூடுதலான தகவல்

### ஸ்ட்ராங்க்ஸ் #5015 பயன்படுத்தப்பட்டுள்ள வசனங்கள்:

*மத்தேயு 2:3: ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள் <5015>.*

*மத்தேயு 14:26: அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து <5015>, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.*

*மாற்கு 6:50: அவர்களெல்லாரும் அவரைக் கண்டு கலக்கமடைந்தார்கள் <5015>. உடனே அவர் அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான் தான், பயப்படாதிருங்கள் என்று சொல்லி.*

*லூக்கா 1:12: சகரியா அவனைக்கண்டு கலங்கி <5015>, பயமடைந்தான்.*

*லூக்கா 24:38: அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் <5015>; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?*

*யோவான் 5:4: ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்திலே இறங்கி, தண்ணீரைக் கலக்குவான் <5015>; தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.*

*யோவான் 5:7: அதற்கு வியாதிஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது <5015> என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.*

*யோவான் 11:33: அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த*

*யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் <5015> துயரமடைந்து:*

*யோவான் 12:27: இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது <5015>, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.*

*யோவான் 13:21: இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி <5015>: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்.*

*யோவான் 14:1: உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக <5015>; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.*

*யோவான் 14:27: சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் <5015> பயப்படாமலும் இருப்பதாக.*

*அப்போஸ்தலர் 15:24: எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதன மடையவேண்டுமென்றும், நியாயாப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி <5015>, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,*

*அப்போஸ்தலர் 17:8: இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப் பண்ணினார்கள் <5015>.*

*கலாத்தியர் 1:7: வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி <5015>, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட*

*மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.*

*கலாத்தியர் 5:10: நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக்குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் <5015> எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.*

*1 பேதுரு 3:14: நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் <5015> இருந்து;*

### *இயேசுவின் வேளை இன்னும் வரவில்லை என்பதற்கான எடுத்துக்காட்டுகள்:*

*யோவான் 8:59: அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.*

*யோவான் 7:8: நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார்.*

*யோவான் 7:30: அப்பொழுது அவரைப் பிடிக்கவகைதேடினார்கள்; ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.*

*யோவான் 7:44: அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதாயிருந்தார்கள்; ஆகிலும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.*

*யோவான் 10:39: இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி,*

BIBLE STUDENTS
Food for New Creature